கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை

S.C.No. 28/2019

நாள் : 11.11.2025.
அ.சா.28 – நிதிக்குமார்
2 முதல் 6 எதிரிகள் ஆஜர்.
**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

26. இவ்வழக்கின் சான்றுபொருட்களான ஆயுதங்கள் மற்றும் ஆடைகளை ஒரே இடத்தில் தான் கைப்பற்றினேன் என்றால் சரிதான். ஒரே நேரத்தில் அனைத்து எதிரிகளும் சான்றுபொருட்களான ஆயுதங்கள் மற்றும் ஆடைகளை எடுக்காமல், ஒவ்வொரு எதிரியாக ஆயுதங்கள் மற்றும் ஆடைகளை எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றால் சரிதான். முதல் எதிரி அவர் பயன்படுத்திய ஆயுதம் மற்றும் ஆடையை எடுத்து ஆஜர் செய்தார். அச்சமயமே நான் அங்கிருந்தேன். நான் சொல்வது போல் சான்று பொருட்களை கைப்பற்றவில்லை என்றும், பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் நான் வழக்கு சொத்துகளை கைப்பற்றப்பட்ட இடத்திற்கு சென்றிருந்தால் சான்று பொருட்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் கைப்பற்றியிருப்பேன் என்றும், ஒவ்வொரு எதிரியிடமிருந்தும் தனிதனியாக கைப்பற்றியிருக்கமாட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

27. என்னுடைய விசாரணையில் அ.சா.14 பிச்சையம்மாள் என்னிடம் முப்பிடாதி (எ) உப்புலாரியை 20.12.2017 அன்று மதுரை திலகர் திடல் போலீசார் இந்த வழக்கு தொடர்பாக விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்று சொல்லவில்லை. என்னுடைய விசாரணையில் அ.சா.14 பிச்சையம்மாள் தன்னுடைய மகன் செல்லபாண்டியை காணவில்லை என 19.12.2017 அன்று மதுரை திலகர் திடல் காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்ற கூறவில்லை, மேற்சொன்ன காவல்நிலையத்தில் தன் மகனை காணவில்லை என வாய்மொழியாக தெரிவித்துள்ளதாக கூறியுள்ளார். என்னுடைய விசாரணையில் அ.சா.14 பிச்சையம்மாள் சந்தையில் வைத்து கார்த்திக்குடன் தகராறு ஏற்பட்டதாக கூறவில்லை. என்னுடைய விசாரணையில் அ.சா.14 பிச்சையம்மாள் மதுரை திலகர் திடல் போலீசார் தன்னுடைய மகனின் இறந்தநிலையில் உள்ள புகைப்படத்தை காண்பித்து விசாரித்தார்கள் என்று கூறவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் மதுரை திலகர் திடல் காவல்நிலைய ஆய்வாளரையோ, உதவி ஆய்வாளரையோ, போலீசாரையோ நான் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

28. அ.சா.15 செல்வபாண்டி, இறந்துபோன செல்லபாண்டியை முப்பிடாதி (எ) உப்புலாரி என்ற நபர் ரஜினி மற்றும் மகேந்திரனிடம் ஒப்படைத்ததாக தன்னுடைய தாயார் தன்னிடம் கூறியதாக என்னுடைய விசாரணையில் கூறவில்லை. அ.சா.16 அனந்தபத்மநாபன் என்னுடைய விசாரணையில் 1வது எதிரி கார்த்திக், நவீன்நாகராஜையும், கோழிக்குழம்பையும் அடித்ததாக கூறவில்லை. அ.சா.16 அனந்தபத்மநாபன் என்னுடைய விசாரணையில் இந்த பிரச்சனைக்கு பின்னர் தன்னை தனது தாயார் சென்னைக்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டு கூறவில்லை, வெளியூருக்கு அனுப்பிவிட்டதாக என்னுடைய விசாரணையில் கூறியதாக சாட்சி கூறுகிறார். அ.சா.16 அனந்தபத்மநாபன் என்னுடைய விசாரணையில் இறந்துபோன செல்லபாண்டியை எதிரிகள் ரஜினி மற்றும் மகேந்திரன் கூட்டிசென்றதை நேரில் பார்த்ததாக கூறவில்லை.

29. இவ்வழக்கில் சுமார் 11 மணிநேரம் காலதாமதமாக முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான காலதாமதத்தை அறிய வேண்டி அந்த முதல்தகவல்அறிக்கையை கொண்டுசென்ற காவலர் மாரிச்செல்வத்தை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இறந்துபோன நபர் யார் என்று தெரியாத காரணத்தினாலும், அவரை யார் கொலை செய்தார்கள் என்று தெரியாத காரணத்தினாலும் போலியாக வழக்கை ஜோடித்துள்ளதால் தான் அந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் தான் நான் காவலர் மாரிச்செல்வத்தை விசாரிக்கவில்லை என்றும், மாரிச்செல்வத்தை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்பதால் தான் நான் அவரை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

30. எனது விசாரணையில் அ.சா.20 அழகர்சாமி தங்களுடைய லாட்ஜில் சிசிடிவி பதிவுகளை ஆய்வாளராகிய நான் சென்று பார்த்ததாக கூறவில்லை. அந்த லாட்ஜில் பணிபுரியும் ஊழியர்களின் பணி வருகைப்பதிவேட்டின் சான்றிட்ட நகலை என்னிடம் கொடுத்தார்கள். அதனை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. எனது விசாரணையில் அ.சா.21 வாசுதேவன் தனக்கு ஆறுமுகம் என்பவரை தெரியாது என்று கூறினாரா என்றால் என்னுடைய விசாரணையில் ஆறுமுகம் என்பவரை பற்றி எந்த வித வாக்குமூலமும் அளிக்கவில்லை. எனது விசாரணையில் அ.சா.25 ஸ்ரீகாந்த்

லாட்ஜில் உள்ள சிசிடிவி பதிவுகளை பொறுத்து Hard disk லிருந்து Pendrive க்கு பதிவிறக்கம் செய்ததாக கூறியுள்ளாரா என்றால் குறிப்பிட்டு அந்த வார்த்தையை கூறவில்லை, ஆனால் பதிவிறக்கம் செய்து அதன் பிறகு படத்தொகுப்பு செய்தும் நிழற்படமாக்கியும் வழங்கினார் என்று விசாரணையில் கூறியுள்ளார்.

31. எனது விசாரணையில் அ.சா.26 நவீன்நாகராஜா 1ம் எதிரி கார்த்திக் (எ) பட்டறை கார்த்திக்கை அடித்து தள்ளிவிட்டதாக கூறவில்லை, கீழே தள்ளிவிட்டதாக தான் கூறியுள்ளார். இறந்துபோன செல்லபாண்டிக்கும் 1ம் எதிரி கார்த்திக் (எ) பட்டறை கார்த்திக்கும் இருந்த முன்பகை தொடர்பாக மதுரை திலகர் திடல் காவல்நிலையத்தில் எந்த புகாரும் இல்லை. முன்விரோதம் என கூறிய இடமான மதுரை சிம்மக்கல் ஆறு முச்சந்தி பகுதியில் எப்பொழுதும் போலீஸ் நடமாட்டம் இருக்கும் என்றும், அந்த இடத்தில் போலீஸ் பீட் உள்ளது என்றால் நான் மதுரை திலகர் திடல் காவல்நிலையத்தில் பணிபுரியாததால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மதுரை தெற்கு வாசல் காவல்நிலையத்தில் ஆய்வாளராக 2009 முதல் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தேன். முன்விரோதம் என கூறிய இடமான மதுரை சிம்மக்கல் ஆறு முச்சந்தி பகுதியில் எப்பொழுதும் போலீஸ் நடமாட்டம் இருக்கும் என்றும், அந்த இடத்தில் போலீஸ் பீட் உள்ளது என்று எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

32. இவ்வழக்கில் அ.த.சா.ஆ.19 முதல் அ.த.சா.ஆ.22 வரையிலான எதிரிகளின் செல்போன் உள் மற்றும் வெளி அழைப்புகள் தொடர்பான ஆவணங்களை சைபர் கிரைம் போலீசார் தான் வழங்கியுள்ளார்கள் என்றால் சைபர்கிரைம் போலீசார் அந்த ஆவணங்களை அந்த தொலைபேசி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொடுத்ததாக சாட்சி கூறுகிறார். தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து சைபர்கிரைம் போலிசார் அந்த ஆவணங்களை பெறவில்லை என்றும், வழக்கிற்காக அந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்தபோன செல்லபாண்டி அவரது கூட்டாளிகளான அ.சா.26 நவீன்நாகராஜ் மற்றும் அ.சா.16 அனந்தபத்மநாபன் ஆகியோருக்கு ஏற்கனவே பல்வேறு குற்ற வழக்குகள் இருப்பதால் அவர்களுக்கு பகைமை அதிகம் என்பதால் அவர்களுடைய பகையாளிகளில் யாரேனும் ஒருவர் செல்லபாண்டியை கொன்றிருக்கலாம் என்றும், எதிரிகளுக்கும்

இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சிகள் அளித்த ரகசிய வாக்குமூலம் அனைத்தையும் சாட்சிகளிடம் நான் கூறியதன் அடிப்படையில் தான் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் சிம்மக்கலில் வசிப்பதால் அவர்கள் மீது தவறான வழக்கை போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் நிரபராதிகள் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.